**இராஜபாளையம் நகராட்சி**

**16.07.2019**

**திருவள்ளுவர் ஆண்டு 2047 விகாரிவருடம் ஆனி மாதம் 31ம் தேதி 2019 ம் வருடம் ஜீலை மாதம் 16ம் தேதி செவ்வாய்க்கிழமை இந்நகராட்சியின் பி.எஸ்.குமாரசாமிராஜா நினைவுக்கூட்டமண்டபத்தில் மாலை 4.00 மணிக்கு இந்நகர் மன்றத்தின் சாதாரணக்கூட்ட நடவடிக்கைகள்.**

**வருகை-திரு.பி.நடராஜன்,நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர் (பொ) மற்றும் தனி அதிகாரி**

1) இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் உள்ள TN84C4241 காம்பாக்ட் வாகனத்திற்கு பழுதுப் பணிகள் பார்க்க 27.05.2019ல் விலைப்புள்ளி கோரப் பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப் பெற்ற விலைப்புள்ளியை முடிவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப் படுகிறது. (எச்1/2019)

| | | |
|---|---|---|
| 1) | மீனா மோட்டார்ஸ் ஒர்க்ஸ்<br>7/112, அம்பேத்கார் நகர் | ரூ.19,530/- |
| 2) | சுதர்சனம் மோட்டார்ஸ்<br>273, புகழேந்தி ரோடு | ரூ.20,200/- |

அஃகு:-

1)மன்றம் அனுமதிக்கலாம்

2)குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள மீனா மோட்டார் ஒர்க்ஸ் நிறுவனத்தாரருக்கு வேலை உத்திரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 149 அனுமதிக்கப்பட்டது.

2) இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் உள்ள TN67AM0619 டம்பர் பிளேசர் வாகனத்திற்கு புதிய டயர்கள் சப்ளை செய்ய 28.05.2019ல் விலைப் புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு விலைப்புள்ளிகள் வரப் பெற்றுள்ளன. வரப்பெற்ற விலைப்புள்ளியை முடிவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப் படுகிறது. (எச்1/1432/2019)

| | | |
|---|---|---|
| 1) | மீனா டயர்ஸ்<br>66A, இரயில்வே பீடர் ரோடு<br>இராஜபாளையம் | ரூ.81,000/- |
| 2) | நவீன் டயர்ஸ்<br>147 C2, T.P.மில்ஸ் ரோடு<br>இராஜபாளையம் | ரூ.82,400/- |

அஃகு:-

1)மன்றம் அனுமதிக்கலாம்
2)குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள மீனா டயர்ஸ் நிறுவனத் தாரருக்கு வேலை உத்திரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 150 அனுமதிக்கப்பட்டது.

3) இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் உள்ள TN67A29290 டம்பர் பிளேசர் வாகனத்திற்கு ஹைட்ராலிக் பம்பு பழுது பார்க்கும் பொருட்டு உத்தேச செலவுத் தொகை ரூ.20,935/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (எச்1/5073 /2019)

அஃகு:-

1)மன்றம் அனுமதிக்கலாம்
2)மேற்படி பணிகள் மேற்கொள்ள உள்ளூர் விலைப்புள்ளி பெறவும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 151அனுமதிக்கப்பட்டது.

4) இந்நகராட்சியில் தனியார் துப்புரவு ஒப்பந்த பணி மூலம் திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகள் (SWM) மேற்கொள்ள வழங்கப்பட்ட உத்தரவு 31.08.2018ல் முடிவுற்ற நிலையில் மீண்டும் மூன்றாண்டுகளுக்கு ஒப்பந்தப் பணிக்காக சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு 11.12.2018ல் பிரேரணை அனுப்பப்பட்டதில் சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 04.12.2018ம் தேதிய செயல்முறை ஆணை எண் 28369/ஜே3/2018ல் 206 துப்புரவு பணியாளர்களுக்கான அனுமதியும் 08.04.2019ம் தேதிய செயல்முறை ஆணை எண் 28069/ஜே3/2018ல் 97 துப்புரவு பணியாளர்களுக்கான அனுமதியும் ஆக மொத்தம் 303 துப்புரவு பணியாளர்களுக்கு தனியார் வசம் ஒப்படைத்து

பணிகளை மேற்கொள்ள அனுமதியளிக்கப்பட்டுள்ளதால், மேற்படி தனியார் மூலம் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்வதற்கு மூன்றாண்டு காலத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்கு செலவாகும் ஓராண்டு செலவுத் தொகை ரூ.3,00,00,000/-க்கும் மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது. (எச்1/2279/2018)

அஃகு:-

1) தனியார் ஒப்பந்தப்பணிக்குரிய செலவினம் மாதம் ஒன்றிற்கு கணக்கீடு செய்யப்பட்டதில் தொகை ரூ.24,17,232/- ஆகும். இத்துடன் கணக்கீடு படிவம் இணைக்கப்பட்டுள்ளது.

2) மேற்படி இப்பணியானது அத்தியாவசியமாக இருப்பதால் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களிடமிருந்து அனுமதி பெறப்பட்டுள்ளதாலும், மேற்படி பணியைச் செய்ய ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.

3) அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் ஒப்புதல் பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

தீர்மானம் எண் 152 அனுமதிக்கப்பட்டது.

5) இந்நகராட்சியில் மொத்தம் 42 வார்டுகள் உள்ள நிலையில் துப்புரவு பணியாளர்கள் போதிய நிலையில் இல்லாத காரணத்தினால் கூடுதலாக துப்புரவு பணியாளர்களை நியமனம் செய்யும் பொருட்டு இவ்வலுவலக கடித எண் எச்1/7279/2018 நாள் 11.12.2018ல் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை-5 அவர்களுக்கு கருத்துரு அனுப்பப்பட்டதில் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 04.12.2018ம் தேதிய செயல்முறை ஆணை எண் 28369/ஜே3/2018ல் 206 துப்புரவு பணியாளர்களையும், 08.04.2019ம் தேதிய செயல்முறை ஆணை எண் 28069/ஜே3/2018ல் 97 துப்புரவு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் தனியார் மூலம் அவுட்சோர்சிங் அடிப்படையில் துப்புரவு பணி மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு 206+97=303 துப்புரவு பணியாளர்கள் பணியிடத்தை தனியார் மூலம் பணியினை மேற்கொள்ளும் பட்சத்தில் மேற்படி துப்புரவு பணியாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ஊதியம், சீருடை, EPF, ESI உட்பட செலவினங்கள் தோராயமாக ரூ.24,17,232/- ஆண்டு ஒன்றுக்கு ரூ.3,00,00,000/- (ரூபாய் மூன்று கோடி) செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்ய மன்ற அனுமதி கோரப்படுகிறது. மேலும் துப்புரவு பணிக்கு அவுட்சோர்சிங் அடிப்படையில் தனியார் நிறுவனத்தின் மூலம் உரிய விதிமுறைகளின்படி ஒப்பந்தப்புள்ளி பெற்று பணி மேற்கொள்ள உய அனுமதி வாங்கவும், மேற்படி

ஒப்பந்தப்புள்ளி கோரும் பொருட்டு செய்தி மக்கள் தொடர்பு துறை மூலம் நாளிதழில் பிரசுரம் செய்யவும் தனியார் நிறவனம் மூலம் 303 பணியாளர்கள் மூலம் துப்புரவு பணி மேற்கொள்ள ஏற்படும் செலவுத் தொகைக்கும் மன்ற அனுமதி கோரப்படுகிறது. (எச்1/7279/2018)

அஃகு:- மன்றம் அனுமதிக்கலாம்

தீர்மானம் எண் 153 அனுமதிக்கப்பட்டது.

6) இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் உள்ள JCB TN67V9423 வாகனத்திற்கு பழுதுப் பணிகள் பார்க்க 18.06.2019ல் விலைப்புள்ளி கோரப் பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற விலைப் புள்ளியை முடிவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப் படுகிறது. (எச்1/843/2019)

| | | |
|---|---|---|
| 1) | M/S.ராமகிருஷ்ணா இன்ஜினியங் ஒர்க்ஸ்<br>2/73, மாரியம்மன் கோவில் தெரு<br>இராஜபாளையம் | ரூ.1,02,600/- |
| 2) | ஸ்ரீ அம்மன் ஹைட்ராலிக்ஸ்<br>இராஜபாளையம் | ரூ.98,000/- |

அஃகு:-

1)மன்றம் அனுமதிக்கலாம்

2)குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ஸ்ரீ அம்மன் ஹைட்ராலிக்ஸ் நிறுவனத்தாரருக்கு வேலை உத்திரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 154 அனுமதிக்கப்பட்டது.

7) இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் உள்ள TN67W5356, TN67W5357 வாகனத்திற்கு பழுதுப் பணிகள் பார்க்க 18.06.2019ல் ஒப்பந்தப்புள்ளி கோரப் பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப் பெற்ற ஒப்பந்தப்புள்ளியை முடிவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப் படுகிறது. (எச்1/1098/2018)

| | | |
|---|---|---|
| 1) | ஸ்ரீராம் மோட்டார்ஸ் ஒர்க்ஸ்<br>354, முடங்கியார் ரோடு<br>இராஜபாளையம் | ரூ.1,01,100/- |

| | | |
|---|---|---|
| 2) | ஸ்ரீ அம்மன் ஹைட்ராலிக்ஸ் இராஜபாளையம் | ரூ.1,05,400/- |

அஃகு:-

1)மன்றம் அனுமதிக்கலாம்

2)குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ஸ்ரீராம் மோட்டார்ஸ் ஒர்க்ஸ் நிறுவனத்தாரருக்கு வேலை உத்திரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 155 அனுமதிக்கப்பட்டது.

8) இந்நகராட்சியில் 1 முதல் 42 வார்டுகளில் குடிநீர் அல்லாத பயன் பாட்டிற்காக 670 ஆழ்துளைக் கிணறுகளுடன் கூடிய சிறுமின்விசைப்பம்புகள் இயங்கி வருகிறது. வறட்சி காலம் நிலவுவதால் தண்ணீர் தேவை அதிகரித்து உள்ளது. இதனால் சிறுவிசை பம்புகளின் பயன்பாடு அதிகரித்து பழுது பணிகள் செய்ய வேண்டியதற்கு உத்தேச மதிப்பீடு தொகை ரூ.10.00 இலட்சத்திற்கு மட்டும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (இ2/5731/2019)

அஃகு:-

1) அனுமதிக்கலாம்

2) மேற்படி பணியினை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

3) இப்பணியின் அவசர அவசியம் கருதி, நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தன அலுவலர் மற்றும் ஆணையாளரின் முன் ஒப்புதல் பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மேல்நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 156 அனுமதிக்கப்பட்டது.

9) இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் உள்ள TN84C4251 காம்பாக்ட் வாகனத்தில் உள்ள மின்கலம் பழுதடைந்து விட்டதால் புதிய மின்கலம் வாங்கி வழங்க உத்தேச செலவுத் தொகை ரூ.8,200/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (எச்1/5497/2019)

அஃகு:-

1)மன்றம் அனுமதிக்கலாம்

2)அவசர அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 157 அனுமதிக்கப்பட்டது.

10) இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் உள்ள TN84C4251 காம்பாக்ட் வாகனத்தில் உள்ள குப்பை தொட்டிகளில் சக்கரங்கள் பழுதாகி விட்டதால் திடக்கழிவு மேலாண்மை பணிகள் தொய்வின்றி செயல்படுத்திடும் பொருட்டு பழுது பணிகள் பார்க்க உத்தேச செலவுத் தொகை ரூ.1,56,800/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (எச்1/5620/2019)

அஃகு:-

1)மன்றம் அனுமதிக்கலாம்

2)அவசர அவசியம் கருதி உள்ளூர் ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகளை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 158 அனுமதிக்கப்பட்டது.

11) இராஜபாளையம் நகர பொது மக்களின் நலன் கருதி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அலுவலக மூலம் பாதாளச் சாக்கடைத் திட்டப்பணி செயல்படுத்த ஏதுவாக கழிவுநீர் உந்து நிலையம் அமைக்க தேர்வு செய்யப்பட்ட இடமான சத்திரப்பட்டி சாலை நகரளவை வார்டு 'J' பிளாக் 8 நகரளவை எண் 240 சர்கார் ரோடு (சத்திரப்பட்டி ரோடு) என வகைபாடு செய்யப்பட்டுள்ள பரப்பளவு 720ச.மீ கொண்ட நகர்மன்றத்தால் தீர்மானிக்கப்பட்ட இடத்தின் (நகர்மன்ற தீர்மான எண் 12 நாள் 12.04.2017) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மேற்படி பணியினை துவக்க உத்தேசித்தபோது தமிழ்நாடு அரசு நெடுஞ்சாலைத் துறையினராலும் தற்போது மேற்படி கூறிய இடத்தின் தென்பகுதியிலுள்ள மைதானமாக அமைந்துள்ள நில உரிமையாளரால் நுழைவு வாயில்கள் அமைக்கப்பட்டு உள்ளது. எனவே பாதாளச்சாக்கடைத் திட்டப்பணிக்கான கழிவுநீர் துணை உந்து நிலையம் அமைக்க தேர்வு செய்யப்பட்ட இடத்திற்குள் நில உரிமையாளர்களாலோ அல்லது இதர தனி

நபர்களாகவோ இடையூறு செய்யா வண்ணம் நகராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டம் விரைவில் செயல் படுத்த ஏதுவாக மேற்படி கூறிய கழிவுநீர் துணை உந்து நிலைய தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பணித் துவக்குவதற்கு முன் நுழைவு அனுமதி பெறுவதற்கு விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் உரிய முன்நுழைவு அனுமதி பெறுவதற்கு மன்றம் அனுமதி பெறலாம். (எப்1/9284/2003)

அஃகு:-

1)இந்து சமய அறநிலையத்துறைக் கட்டுப்பாட்டில் உள்ள இந்நகர பெத்தவநல்லூர் மாயூரநாதசுவாமி திருக்கோவிலுக்கு பாத்தியப்பட்ட நகளரவு வார்டு B பிளாக் 18 நகரளவு எண் 103ல் 70 சென்ட் பரப்பளவு இடத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ள துணை உந்து நிலையம் அமைக்க விரைவில் பணி துவங்குவதற்கு ஏதுவாக முன் நுழைவு அனுமதி பெறுவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

2)அவசர அவசியம் கருதி பாதாள சாக்கடைத் திட்டத்தின் பணிகளை விரைவில் முடிப்பதற்கு ஏதுவாக பொருளில் கண்டுள்ள திட்டங்களுக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 159 அனுமதிக்கப்பட்டது.

12) இராஜபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட நகரளவு வார்டு I பிளாக் 17 நகரளவு எண் 3 நகராட்சிக்கு பாத்தியப்பட்ட பொது மாயான இடத்தில் சங்கரன் கோவில் ரோட்டினை அணுகியுள்ள இராஜபாளையம் இராஜீக்கள் சமுதாயத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட மாயான இடத்தினை பாதாளச் சாக்கடை திட்டத்திற்கு கழிவுநீர் உந்து நிலையம் அமைக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் முன்னதாகவே இந்நகராட்சிக்கு பாதாளச் சாக்கடை திட்டப் பணிக்கு கழிவுநீர் உந்து நிலையம் அமைக்க தேர்வு செய்யப்பட்டது. தற்போது இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் பாதாளச் சாக்கடைத் திட்டப்பணிக்காக சங்கரன் கோவிலுள்ள ரோட்டிலுள்ள நகராட்சிக்குப் பாத்தியப்பட்ட மேற்படி கூறிய பொது மயான இடத்தில் சாலையினை அணுகியுள்ள இராஜபாளையம் இராஜீக்கள் சமுதாயத்தினரால் கழிவுநீர் உந்து நிலையம் அமைக்க பணிகளை துவங்க முற்படும் போது மேற்படி சமுதாயத்தின் முக்கிய பிரமுகர் மூலம் ஆட்சேபித்து பணி துவங்க விடாமல் தடுத்தனர். மேற்படி சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்படாத வண்ணம் இராஜபாளையம் வருவாய் வட்டாட்சியர்

அவர்களை நேரில் தொடர் கொண்டு கழிவுநீர் உந்து நிலையம் அமைக்க உள்ளதை மேற்படி சமுதாயத்தினரால் ஆட்சேபனை செய்ததை தெரிவித்த போது, வருவாய் வட்டாட்சியர் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் நகராட்சி அலுவலர்கள் மூலம் கலந்து ஆலோசனை செய்ததின் பேரில் மாற்று இடம் தேர்வு செய்ய முடிவு செய்யப்பட்டது.

அதன் பேரில் மேற்படி இராஜபாளையம் நகராட்சிக்கு பாத்தியப்பட்ட புதிய பேருந்து நிலையத்தின் தெற்கில் உள்ள இடமான இராஜபாளையம் வருவாய் வட்டாட்சியரால் புதுப்பாளையம் கிராமம் புலஎண் 262/1 “களம்” வகைப்பாட்டில் உள்ள 16.5 ஏர்ஸ் (1650ச.மீ) பரப்பளவு கொண்ட இடம் தேர்வு செய்யப்பட்டது.

“களம்” வகைப்பாடு உள்ள இடத்திற்கு அணுகு சாலையாக சங்கரன் கோவில் ரோடு அமைவதாலும், இப்பகுதியில் நகராட்சிக்குப் பாத்தியப்பட்டோ, அரசுக்கு பாத்தியப்பட்டோ, மாற்று இடங்கள் இல்லாததாலும் தனியாருக்குப் பாத்தியப்பட்ட இடம் அமையாததாலும் அவசர அவசியம் கருதி இந்நகர் வாழ் பொது மக்களின் நலன் கருதியும், மேற்படி கூறிய புதுப்பாளையம் கிராமம் புல எண் 262/1 16.5 ஏர்ஸ் (1650ச.மீ) பரப்பளவு உள்ள களம் வகைப்பாடு உள்ள இடத்தினை கழிவு நீர் உந்து நிலையம் அமைப்பதற்க்கும், நகராட்சி நில உரிமம் பெறுவதற்க்கும் விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஒப்புதல் பெறுவதற்க்கு மன்றம் அனுமதிக்கலாம்.(எப்1/9284/2003)

அஃகு:- மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 160 அனுமதிக்கப்பட்டது.

13) இராஜபாளையம் நகராட்சி வார்டு எண்.38 மதுரை ராஜா கடை தெரு, கதவு எண்.163,164,164/1 திரு.எஸ்.எம்.முருகபூபதிராஜா, என்பவர் ஸ்ரீவில்லிபுத்தூர், முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தனக்கு சொத்துவரி விதிக்கப்பட்டதை எதிர்த்து, வழக்கு எண்.ஓ.எஸ்.எண்.20/2013ன்படி வழக்கு தொடர்ந்துள்ளார். இவ்வழக்கில் நீதிமன்ற ஆணைக்குழுவிலிருந்து வழக்கறிஞர் திரு.ஜி.மூர்த்தி என்பவரை, மேற்படி இடத்தினை பார்வையிட்டும் அளவீடு செய்யவும் உத்தரவிட்டதனை தொடர்ந்து, மேற்படியார் 09.02.2019 அன்று இருதரப்பினருக்கான வழக்கறிஞர்கள் முன்னிலையில் மேற்படி இடத்தினை பார்வையிட்டு அளவீடு செய்து சென்றனர். இப்பணியினை மேற்கொண்ட வழக்கறிஞர் திரு.ஜி.மூர்த்தி என்பவருக்கு வழக்கறிஞர் கட்டணமாக தொகை ரூ.3500/- (ரூபாய் மூவாயிரத்து ஐநூறு மட்டும்) வழங்க நீதிமன்றம் தெரிவித்துள்ளதை தொடர்ந்து மேற்படி தொகையினை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (அ2/259/2011)

அஃகு:- அனுமதிக்கலாம்

தீர்மானம் எண் 161 அனுமதிக்கப்பட்டது.

14) இராஜபாளையம் நகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தில் நீர் உந்து நிலையம் அமைக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அலுவலகம் மூலமாக உத்தேசிக்கப்பட்ட இடமான வார்டு B பிளாக் 18 நகரளவு எண் 103 உள்ள இடம் (70 சென்ட்) அருள்மிகு மாயூரநாதசுவாமி திருக்கோவிலுக்குப் பாத்தியப்பட்ட இடமாகும். மேற்படி இடத்தினை அரசின் நில மதிப்பீட்டின் படியும் மாவட்ட வருவாய் அலுவல சந்தை மதிப்பீட்டின் வழிகாட்டின் படியும் நிர்ணயம் செய்யும் விலைக்கு ராஜபாளையம் நகராட்சி தருவதற்கு செயல் அலுவலர் அருள்மிகு மாயூரநாதசுவாமி திருக்கோவில் செயல் அலுவலர் இசைவு தெரிவித்துள்ளனர். எனவே மேற்கூறிய திருக்கோயிலுக்கு பாத்திய மான இடத்தினை நகராட்சி மூலம் கிரயம் பெறுவதற்கும் மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது. (எப்1/9284/2003)

அஃகு:- நகராட்சியின் நிதி நிலைமையை அனுசரித்து நில வழிகாட்டுதலின் படியோ மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களால் நிர்ணயம் செய்யும் சந்தை மதிப்பீட்டின் பேரிலோ கிரயம் பெறுவதற்கும் மேற்கூறிய தொகை களை கிரையம் பெறுவதற்கு அரசிடமிருந்து முழு மானியம் பெறுவதற்கு அரசுக்கு பிரேரணை அனுப்பி உரிய மானியம் பெறுவதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 162 அனுமதிக்கப்பட்டது.

15) இந்நகராட்சி தலைமை நீரேற்று நிலையம் பகுதியில் ஆழ்குழாய் கிணறு சுத்தப்படுத்துதல் (கிழக்கு பகுதி) பணிக்கு மதிப்பீட்டு தொகை ரூ.1,50,000/-க்கு 18.06.2019ல் மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை முடிவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப் படுகிறது. (இ2/5479/2019)

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1) | தங்கம் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டு தொகையை விட 0.04% குறைவு |
| 2) | பாலசாஸ்தா ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டு தொகையை விட 1.33% அதிகம் |

அஃகு:-

1) அனுமதிக்கலாம்

2) குறைந்த விலைவிகிதம் கொடுத்துள்ள திரு.தங்கம் ஒப்பந்ததாரர் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

3) அவசர அவசியம் கருதி, நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளரின் முன் ஒப்புதல் பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 163 அனுமதிக்கப்பட்டது.

16) இந்நகராட்சி தலைமை நீரேற்று நிலையம் பகுதியில் ஆழ்குழாய் கிணறு சுத்தப்படுத்துதல் (தெற்கு பகுதி) பணிக்கு மதிப்பீட்டு தொகை ரூ.2,00,000/-க்கு 18.06.2019ல் மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை முடிவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப் படுகிறது. (இ2/5479/2019)

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1) | தங்கம் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டு தொகையை விட 0.04% குறைவு |
| 2) | பாலசாஸ்தா ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டு தொகையை விட 1.33% அதிகம் |

அஃகு:-

1) அனுமதிக்கலாம்

2) குறைந்த விலைவிகிதம் கொடுத்துள்ள திரு.தங்கம் ஒப்பந்ததாரர் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

3) அவசர அவசியம் கருதி, நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளரின் முன் ஒப்புதல் பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 164 அனுமதிக்கப்பட்டது.

17) இந்நகராட்சி தலைமை நீரேற்று நிலையம் பகுதியில் ஆழ்குழாய் கிணறு சுத்தப்படுத்துதல் (மேற்கு பகுதி) பணிக்கு மதிப்பீட்டு தொகை ரூ.1,50,000/-க்கு 18.06.2019ல் மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளி

வரப்பெற்றுள்ளது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை முடிவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப் படுகிறது. (இ2/5479/2019)

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1) | தங்கம் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டு தொகையை விட 0.04% குறைவு |
| 2) | பாலசாஸ்தா ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டு தொகையை விட 1.33% அதிகம் |

அஃகு:-

1) அனுமதிக்கலாம்

2) குறைந்த விலைவிகிதம் கொடுத்துள்ள திரு.தங்கம் ஒப்பந்ததாரர் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

3) அவசர அவசியம் கருதி, நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளரின் முன் ஒப்புதல் பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 165 அனுமதிக்கப்பட்டது.

18) இந்நகராட்சி தலைமை நீரேற்று நிலையம் பகுதியில் உள்ள திறந்தவெளி கிணறு எண்.9,10 ஆழப்படுத்தும் பணிக்கு மதிப்பீட்டு தொகை ரூ.5,70,000/-க்கு 13.06.2019ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப் புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை முடிவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப் படுகிறது. (இ2/5479/2019)

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1) | C.பாஸ்கரன் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டு தொகையை விட 0.89% குறைவு |
| 2) | A.P.முத்துகிருஷ்ணராஜா ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டு தொகையை விட 6.27% அதிகம் |

அஃகு:-

1) அனுமதிக்கலாம்

2) குறைந்த விலைவிகிதம் கொடுத்துள்ள திரு.C.பாஸ்கரன் ஒப்பந்த தாரர் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

3) அவசர அவசியம் கருதி, நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளரின் முன் ஒப்புதல் பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 166 அனுமதிக்கப்பட்டது.

19) இந்நகராட்சி தலைமை நீரேற்று நிலையம் பகுதியில் உள்ள திறந்தவெளி கிணறு எண்.5,7 ஆழப்படுத்தும் பணிக்கு மதிப்பீட்டு தொகை ரூ.4,40,000/-க்கு 13.06.2019ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப் புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை முடிவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப் படுகிறது. (இ2/5479/2019)

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1) | C.பாஸ்கரன் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டு தொகையை விட 0.78% குறைவு |
| 2) | A.P.முத்துகிருஷ்ணராஜா ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டு தொகையை விட 5.63% அதிகம் |

அஃகு:-

1) அனுமதிக்கலாம்

2) குறைந்த விலைவிகிதம் கொடுத்துள்ள திரு.C.பாஸ்கரன் ஒப்பந்த தாரர் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

3) அவசர அவசியம் கருதி, நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளரின் முன் ஒப்புதல் பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 167 அனுமதிக்கப்பட்டது.

20) இந்நகராட்சி தலைமை நீரேற்று நிலையம் பகுதியில் உள்ள திறந்தவெளி கிணறு எண்.3,6 ஆழப்படுத்தும் பணிக்கு மதிப்பீட்டு தொகை ரூ.4,60,000/-க்கு 13.06.2019ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப் புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை முடிவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப் படுகிறது. (இ2/5479/2019)

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1) | P.காளிராஜ்குமார் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டு தொகையை விட 0.05% குறைவு |
| 2) | M.பாலசாஸ்தா ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டு தொகையை விட 2.89% அதிகம் |

அஃகு:-

1) அனுமதிக்கலாம்

2) குறைந்த விலைவிகிதம் கொடுத்துள்ள திரு.P.காளிராஜ்குமார் ஒப்பந்ததாரர் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

3) அவசர அவசியம் கருதி, நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளரின் முன் ஒப்புதல் பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 168 அனுமதிக்கப்பட்டது.

21) இந்நகராட்சி தலைமை நீரேற்று நிலையம் பகுதியில் உள்ள திறந்தவெளி கிணறு எண்.1 ஆழப்படுத்தும் பணிக்கு மதிப்பீட்டு தொகை ரூ.4,80,000/-க்கு 13.06.2019ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப் பெற்றுள்ளது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை முடிவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப் படுகிறது. (இ2/5479/2019)

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1) | P.காளிராஜ்குமார் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டு தொகையை விட 0.05% குறைவு |
| 2) | M.பாலசாஸ்தா ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டு தொகையை விட 2.89% அதிகம் |

அஃகு:-

1) அனுமதிக்கலாம்

2) குறைந்த விலைவிகிதம் கொடுத்துள்ள திரு.P.காளிராஜ்குமார் ஒப்பந்ததாரர் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

3) அவசர அவசியம் கருதி, நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளரின் முன் ஒப்புதல் பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 169 அனுமதிக்கப்பட்டது.

22) இந்நகராட்சி தலைமை நீரேற்று நிலையம் பகுதியில் உள்ள திறந்தவெளி கிணறு எண்.11,13 ஆழப்படுத்தும் பணிக்கு மதிப்பீட்டு தொகை ரூ.4,30,000/-க்கு 18.06.2019ல் மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப் புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை முடிவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப் படுகிறது. (இ2/5479/2019)

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1) | P.காளிராஜ்குமார் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டு தொகையை விட 0.07% குறைவு |
| 2) | M.பாலசாஸ்தா ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டு தொகையை விட 1.85% அதிகம் |

அஃகு:-

1) அனுமதிக்கலாம்
2) குறைந்த விலைவிகிதம் கொடுத்துள்ள திரு.P.காளிராஜ்குமார் ஒப்பந்ததாரர் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
3) அவசர அவசியம் கருதி, நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளரின் முன் ஒப்புதல் பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 170 அனுமதிக்கப்பட்டது.

23) இந்நகராட்சி பொறியியல் பிரிவு குடிநீர் வாகனம் TN67W8138 ரீபட்டன் செய்யும் பணிக்கு 12.06.2019ம் தேதி விலைப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்ற விலைப்புள்ளியினை முடிவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப் படுகிறது. (இ2/368/2019)

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|

| | | |
|---|---|---|
| 1) | செல்வசுந்தரம் டயர் ஒர்க்ஸ்<br>17, செவல்பட்டி வடக்கு தெரு | ரூ.16,500/- |
| 2) | பவித்ரா ரீடெரடிங்<br>461/210, மதுரை ரோடு, இராஜபாளையம் | ரூ.17,000/- |

அஃகு:-

1) மன்றம் அனுமதிக்கலாம்

2)குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள செல்வசுந்தரம் நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்

3) அவசர அவசியம் கருதி, நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளரின் ஒப்புதல் பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் பின்னேற்பு செய்யலாம்.

தீர்மானம் எண் 171 அனுமதிக்கப்பட்டது.

24) இந்நகராட்சி பொறியியல் பிரிவில் உள்ள TN67Z2642 வாகனத்திற்கு பழுது பணிகள் மேற்கொள்வதற்கான விலைப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்ற விலைப்புள்ளியினை முடிவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப் படுகிறது. (இ2/5362/2019)

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| 1) | ஸ்ரீராம் மோட்டார் ஒர்க்ஸ்<br>354, முடங்கியார் ரோடு | ரூ.12,025/- |
| 2) | ஸ்ரீ முத்துமாரியம்மன் மோட்டார்ஸ்<br>193E, மீனாட்சி தியேட்டர் ரோடு | ரூ.12,750/- |

அஃகு:-

1) மன்றம் அனுமதிக்கலாம்

2)குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ஸ்ரீராம் மோட்டார் ஒர்க்ஸ் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.

3) அவசர அவசியம் கருதி, மேற்படி நிறுவனத்தாரருக்கு நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளரின் ஒப்புதல் பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 172 அனுமதிக்கப்பட்டது.

25) இந்நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 42 முடிய உள்ள வார்டுகளில் உள்ள ஆழ்துளை கிணறுகளுடன் கூடிய சிறுவிசை மின்பம்புகள் பழுது பார்க்கும் பொருட்டு 25.06.2019ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளி கள் வரப் பெற்றுள்ளது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை முடிவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப் படுகிறது. (இ2/5731/2019)

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1) | திருமதி.P.பத்மசாந்தி ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டு தொகையை விட 0.02% குறைவு |
| 2) | திரு.சந்திரசேகரன் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டு தொகையை விட 0.30% அதிகம் |

அஃகு:-

1) மன்றம் அனுமதிக்கலாம்

2) குறைந்த மதிப்பீட்டு விலைவிகிதம் கொடுத்துள்ள திருமதி. P.பத்மசாந்தி ஒப்பந்ததாரருக்கு வேலை உத்திரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 173 அனுமதிக்கப்பட்டது.

26) இராஜபாளையம் நகராட்சி பகுதியில் உள்ள 6116 எண்ணம் தெரு விளக்குகள் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்கான மதிப்பீடு மற்றும் ஒப்பந்தப்புள்ளி நமூனா (Bid Document) ஆகியவை சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமைப் பொறியாளர் அவர்களின் கடிதம் ந.க.எண்.13899/2016/ DO நாள்.06.04.2018ன்படி கீழ்க்கண்டவாறு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| முதலாம் ஆண்டு | ரூ.78.53 லட்சம் |
| இரண்டாம் ஆண்டு | ரூ.82.46 லட்சம் |

| | |
|---|---|
| (5% Add) | |
| மூன்றாம் ஆண்டு<br>(5% Add) | ரூ.86.58 லட்சம் |

மேற்படி உத்திரவில் முதலாமாண்டிற்கு அனுமதி வழங்கியும் மேற்படி பணிக்கான ஒப்பந்த நிறுவனத்தின் செயல்திறனை கருத்தில் கொண்டு அடுத்தடுத்த இரண்டு மற்றும் மூன்றாம் ஆண்டுகளுக்கு மீண்டும் தலைமைப் பொறியாளரின் முன்ஒப்புதல் பெற்று நீட்டிப்பு செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி இப்பணிக்கான முதலாமாண்டு ஒப்பந்தம் 31.07.2018ம் நாளிட்ட தீர்மானம் எண்.614ல் ஒப்புதல் அளித்ததின் பேரில் பணி மேற்கொள்ள வழங்கப்பட்ட வேலை உத்திரவு ந.க.எண்.இ2/3641/2017 நாள்.30.07.2018ன்படி 31.07.2019ல் முடிவடைகிறது. எனவே, தலைமைப் பொறியாளர், சென்னை அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு தற்போது இப்போது பணியினை மேற்கொண்டு வரும் M.S.ஆகாஷ் இன்ஜினியரிங் அசோசியேட்ஸ் (பிரைவேட்) லிட் சென்னை நிறுவனத்தின் செயல்திறன் திருப்திகரமாக உள்ளதால் இரண்டாம் ஆண்டிற்கான ஒப்பந்தத்தை சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமைப் பொறியாளரின் முன்அனுமதி பெற்று நீட்டிப்பு செய்யவும் இப்பணிக்கான செலவினம் ரூ.82.46 இலட்சத்தினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அஃகு:-

1) அனுமதிக்கலாம்

2) ஒப்பந்தத்தினை இரண்டாம் ஆண்டிற்கு M.S.ஆகாஷ் இன்ஜினியரிங் அசோசியேட்ஸ் நிறுவனத்திற்கு சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமைப் பொறியாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று நீட்டிப்பு செய்யலாம்

3) இப்பணிக்கான செலவினத்தொகை ரூ.82.46 இலட்சத்தினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

தீர்மானம் எண் 174 அனுமதிக்கப்பட்டது.

27) இந்நகராட்சி கோடைகுடிநீர் தேக்கப் பகுதியில் அமைந்துள்ள ஆழ்துளைக்கிணறுகள் மற்றும் திறந்தவெளிக்கிணறுகளில் ஏற்படும் பழுது பணிகள் பார்க்கும் பொருட்டு 28.06.2019ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை முடிவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப் படுகிறது. (இ2/5562/2019)

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1) | M/S.Dhavich design & Pvt Ltd | மதிப்பீட்டு தொகையை விட 0.31% குறைவு |
| 2) | Thiru.K.Thangam Contractor | மதிப்பீட்டு தொகையை விட 2.52% அதிகம் |

அஃகு:-

1) மன்றம் அனுமதிக்கலாம்

2) குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள M/S.Dhavich design & Pvt Ltd நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

3) அவசர அவசியம் கருதி, நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளரின் முன் ஒப்புதல் பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 175 அனுமதிக்கப்பட்டது.

28) இந்நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் குடிநீர் சுத்திகரிப்பு Liquid Chlorination பணிகளுக்கு கடந்த 28.06.2019ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை முடிவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப் படுகிறது. (இ2/6019/2019)

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1) | M/S.Excellent Chloro Systems | மதிப்பீட்டு தொகையை விட 0.03% குறைவு |
| 2) | Shri Sathya dyes and Chemicals | மதிப்பீட்டு தொகைக்கு சமமாக உள்ளது |

அஃகு:-

1) மன்றம் அனுமதிக்கலாம்

2) குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள M/S.Excellent Chloro Systems நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

3) அவசர அவசியம் கருதி, நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் ஒப்புதல் பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 176 அனுமதிக்கப்பட்டது.

29) இந்நகராட்சி கோடைகுடிநீர் தேக்கம் பகுதியில் அமைந்துள்ள ஜெனரேட்டர் எண். II பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு 12.06.2019ம் தேதியன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்ற விலைப்புள்ளியினை முடிவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப் படுகிறது. (இ2/00669/2019)

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1) | வீ ஆர் மார்க்கெட்டிங், 876, தென்காசி ரோடு | ரூ.13,350/- |
| 2) | விநாயகா பேட்டரி சர்வீஸ் 63, மதுரை மெயின் ரோடு | ரூ.13,800/- |

அஃகு:-

1) அனுமதிக்கலாம்

2) குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள வீஆர் மார்க்கெட்டிங், நிறுவனத்திற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

3) அவசர அவசியம் கருதி, நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் நகராட்சி பொறியாளர் / தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் முன் ஒப்புதல் பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் பின்னேற்பு செய்யலாம்.

தீர்மானம் எண் 177 அனுமதிக்கப்பட்டது.

30) இராஜபாளையம் நகராட்சி 2019-2020ஆம் ஆண்டிற்கு ஒப்பந்ததாரர்கள் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட வருமான வரியை நான்கு காலாண்டிற்கு TDS தாக்கல் செய்வதற்கும், மற்றும் நகராட்சி பணியாளர்களிடம் பிடித்தம் செய்த வருமான வரியினை சார்ட்டடு அக்கவுண்டன்ட் மூலம் தாக்கல் செய்வதற்கும் அதற்காகும் உத்தேச செலவு தொகை ரூ.50,000/-ற்கு (ரூபாய் ஐம்பதாயிரம்) மட்டும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (பி4/9041/2000)

அஃகு:-

1) செலவுத் தொகைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி, நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்(பொ) அவர்களின் அனுமதி

பெற்று திரு.ஆர்.கிருஷ்ணமூர்த்தி (சார்ட்டடு அக்கவுண்டன்ட்) அவர்களுக்கு TDS தாக்கல் செய்த வகைக்கு தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 178 அனுமதிக்கப்பட்டது.

31) இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் உள்ள TN67Z2347 டிராக்டர் மற்றும் TN67Z2348 டிரைலர் வாகனத்திற்கு தகுதிச்சான்று பெறும் பொருட்டு கீழ்க்கண்ட பழுதுப்பணிகள் பார்க்க உத்தேச மதிப்பீடு தொகை ரூ.98,500/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (எச்1/5725/2019)

**<u>TN67Z2347 டிராக்டர்</u>**

1. நான்கு வீல் கிரிஸ் செய்து பேரீங் சரிசெய்தல்

2.டீசல் பம்பு நாசில் சரிசெய்தல்

3.பிரேக் லைனிங் சரிபார்த்தல்

4.இன்ஜின் ஆயில் மாற்றுதல், கிரோசின் ஆயில், டீசல் ஆயில் தார்பாய் சரிபார்த்தல்

5.இரண்டு சைடு மக்காடு சரிசெய்தல், டிரைவர் சீட் சரிசெய்தல்

6.வாட்டர் சர்வீஸ் பெயிண்டிங், வயரிங் சரிசெய்தல்

**<u>TN67Z2348</u>**

1. இரண்டு வீல் பேரிங் மாற்றி கிரீஸ் வைத்தல்

2. டிரைலரில் தரைதளம் புதியது மாற்றி சைடு கதவுகள் பெயிண்டிங், வயரிங் சரிபார்த்தல்

அஃகு:-

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) உள்ளூர் ஒப்பந்தப்புள்ளி பெற்று பணிகளை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 179 அனுமதிக்கப்பட்டது.

32) இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் உள்ள TN67K3011 டம்பர் பிளேசர் வாகனத்திற்கு பழுதுப்பணிகள் பார்க்க 05.07.2019ம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை முடிவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (எச்1/1481/2019)

| | | |
|---|---|---|
| 1) | ஸ்ரீ அம்மன் ஹைட்ராலிக்ஸ்<br>இராஜபாளையம் | ரூ.1,54,325/- |
| 2) | ஸ்ரீராம் மோட்டார் ஒர்க்ஸ்<br>354, முடங்கியார் ரோடு<br>இராஜபாளையம் | ரூ.1,46,885/- |

அஃகு:-

1) மன்றம் அனுமதிக்கலாம்

2) குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ஸ்ரீராம் மோட்டார் ஒர்க்ஸ் நிறுவனத்தாரருக்கு வேலை உத்தரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 180 அனுமதிக்கப்பட்டது.

33) இந்நகராட்சி 6வது மைல் பகுதியில் அமைந்துள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் இருந்து நகர்பகுதிக்கு வரும் 16" குடிநீர் பிரதான குழாய் பழுதடைந்துள்ளதை பராமரிப்பு பணி மேற்கொள்வதற்கு மதிப்பீட்டு தொகை ரூ.40,000/-க்கு மட்டும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (இ2/6145/2019)

அஃகு:-

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) இப்பணியின் அவசர அவசியம் கருதி, நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளரின் முன் ஒப்புதல் பெற்று நகர்மன்ற பதிவுபெற்ற ஒப்பந்ததாரர் திரு.R.வின்சென்ட் செல்வராஜ் மூலம் மதிப்பீடு விகிதத்தில் செய்ய அனுமதிக்கலாம்.

3) மேற்படி பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் முன் ஒப்புதல் பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 181அனுமதிக்கப்பட்டது.

34) இந்நகராட்சியின் தூய்மை இந்தியா திட்டம் 2018-19ம் ஆண்டின் கீழ் உரக் கிடங்கு உரச்சுரங்கம் அமைக்கும் பணிக்கு Retender மாநில அளவில் விளம்பரம் செலவு வகைக்கு ரூ.1,41,330/-ஐ Accord Advertising Agency நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (இ1/2711/2018)

அஃகு:- மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 182 அனுமதிக்கப்பட்டது.

35) இந்நகராட்சியின் தூய்மை இந்தியா திட்டம் 2017-18ம் ஆண்டின் கீழ் திடக்கழிவு மேலாண்மை பணிகள் செயல்படுத்த ReTender மாநில அளவில் பத்திரிக்கையில் விளம்பரம் செய்த வகைக்கு ரூ.70,088/-ஐ Accord Advertising Agency நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (இ1/8865/2017)

அஃகு:- மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 183 அனுமதிக்கப்பட்டது.

36) இராஜபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட தென்காசி ரோட்டில் PSK பூங்கா எதிர்புறம் மழைநீர் வடிகால் கட்டும் பணி ரூ.9.15 லட்ச மதிப்பீட்டில் நகர்மன்றத்தின் 10.09.2018ஆம் ஆண்டிற்கு நாளிட்ட தீர்மானம் எண் 662ல் நிர்வாக அனுமதி கோரப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வந்தது. இப்பணி முடிக்கப்பட்ட நிலையில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட செலவினம் ரூ.5,31,891/- போக மீதி ரூ.3,83,159/- உள்ளது. இந்நிலையில் இந்நகர் பகுதிக்குட் பட்ட திருவனந்தபுரம் 35வது குறுக்கு தெரு, 3ஆவது குறுக்கு தெருக்களில் ஏற்கனவே இருந்த மழைநீர் வடிகால் நேரிலும் சேதமடைந்து கழிவுநீர் செல்ல வழியில்லாமல் தேங்கி உள்ளதாகவும் அதன் சீரமைப்பு செய்து கட்டி தர அப்பகுதி பொதுமக்கள் கோரியுள்ளனர்.

எனவே மேற்படி பகுதியில் கழிவுநீர் செல்ல வழி இல்லாமல் முற்றிலும் சேதமடைந்த மழைநீர் வடிகாலை பொது சுகாதாரத்தினை பேணும் விதமாக சீரமைப்பு செய்து புதிதாக கட்டும் பணி தொடரவும், அதற்கான செலவினத்தை மீதமுள்ள தொகையிலிருந்து மேற்கொள்ளவும், மேற்படி புதிய தெருக்களை உள்ளடக்கிய பணி திருத்திய மதிப்பீடு ரூ.9,15,000/-க்கு மன்றத்தின் திருத்திய நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது. (இ1/4743/2018)

அஃகு:-

1) அனுமதிக்கலாம்.
2) திருத்திய மதிப்பீட்டிற்கு திருத்திய நிர்வாக அனுமதி வழங்கலாம்.
3)பொது மக்கள் நலன் கருதி, மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்றதையும் அங்கீகரிக்கலாம்.

தீர்மானம் எண் 184 அனுமதிக்கப்பட்டது.

37) இராஜபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட மாடசாமி கோவில் ரோட்டில் நகர்ப்புற சுகாதார மையம் பின்புறம் அங்கன்வாடிமையம் 5க்கு புதிய கட்டிடம் ரூ.8.50 லட்ச மதிப்பீட்டில் கட்டப்பட்டு வந்தது. மேற்படி பணி மேற்கொள்ளும் போது ஸ்தலத்தின் தன்மைக்கேற்ப அசல் மதிப்பீட்டில் வகை செய்யப்படாத கீழ்க்கண்ட இனங்களும்,

1)Plumbing

2)Well growel supply and filling

3)Supply and fixed of 1000 litre HDPE Tank

4)Supply and fixed PVC Door

5)Supply and fixed of Eurocon files

6)Gronothic floor finish

ஏற்கனவே அசல் மதிப்பீட்டில் வகை செய்யப்பட்டு மதிப்பீட்டை விட கூடுதல் அளவில் கீழ்க்கண்ட இனங்களும்

1)Brick work in cm 1:5 mix

2)Centering for coloumn

3)Supply and Fabrication of steel

4)RCC 1:1.5:3 mix us 20mm HPG metal.

மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் மூலம் பணியின் ஒட்டு மொத்த வேலை யளவு ரூ.9,22,684/- என்றாகி விட்டது. ஏற்கனவே நகர்மன்றம் தனது 31.07.18ம் நாளிட்ட தீர்மானம் எண் 617ல் நிர்வாக அனுமதி பெற்ற தொகையான ரூ.8,50,000/-ஐ விட ரூ.72684/- கூடுதலாக பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவசர அவசியம் கருதி,

ஸ்தலத்தின் தன்மைக்கேற்ப பணி மேற்கொள்ளப் பட்டமைக்கும், அதற்கு கூடுதல் செலவினம் ரூ.72684/- (ரூபாய் எழுபத்தி இரண்டாயிரத்து அறுநூற்றி எண்பத்து நான்கு மட்டும்) சேர்த்து ரூ.9,22,684/-க்கு தயார் செய்யப்பட்டுள்ள திருத்திய மதிப்பீட்டிற்கு மன்றத்தின் திருத்திய நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது. (இ1/3810/2018)

அஃகு:-

1) அனுமதிக்கலாம்.
2) மேற்படி கூடுதல் செலவினம் ரூ.72684/-ஐ கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 185 அனுமதிக்கப்பட்டது.

38) மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரைகள் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்கநர் திருநெல்வேலி அவர்களின் கடிதம் ந.க.எண்.53/2010/ஆ1 நாள். 27.06.2019 உத்திரவின்படி இராஜபாளையம் நகராட்சிப் பகுதிகளில் மழைநீர் சேகரிப்பு தொடர்பாக பொது மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் அறிவிப்பு நோட்டீஸ் மற்றும் ஸ்டிக்கர் அச்சடிப்பதற்குரிய செலவுத் தொகைக்கு நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அஃகு:- அரசின் சிறப்புத் திட்டமாக உள்ளதால் மேற்படி செலவினத்தை வருவாய் மூலதன நிதியிலிருந்து செலவிட மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 186 அனுமதிக்கப்பட்டது.

39) இந்நகராட்சியில் கணக்கர் ஆக பணியாற்றி வரும் திரு.கோ.வெங்கடேசன் என்பவர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் WP(MD)NO.15225/2019 வழக்கில் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் பிரதிவாதியாகவும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்கள் இரண்டாம் பிரதிவாதியாகவும் நகராட்சி ஆணையர் அவர்கள் மூன்றாம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டு உள்ளதால் மேற்படி வழக்கில் திரு.N.திலீப்குமார்BABL ஆஜராகவும் அதற்கான செலவுத் தொகைக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அஃகு:- அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 187 அனுமதிக்கப்பட்டது.

40) இராஜபாளையம் நகராட்சிப்பணிகளை மின்ஆளுமை UTIS மென்பொருள் மூலம் அனைத்துப்பணியாளர்களும் தங்கள் இருக்கையிலிருந்தே மேற்கொள்ள கூடுதல் கணினிகள் 20 எண்ணம் வாங்குவதற்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (இ1-5563-2019)

| வரிசை எண் | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1. | M/S- MALAR COMPUTER RAJAPALAYAM | 9,34,000/- |
| 2. | M/S- KB SYSTEM AND SERVICE RAJAPALAYAM | 8,95,620/- |

s

<u>அலுவலக குறிப்பு</u>

மேற்கண்ட பணிக்கு நகர்மன்ற தீர்மான எண் 135 நாள் 12.6.19ல் ரூ.9.00 லட்சத்திற்கு அனுமதி அளித்துள்ளது. அதேன் பேரில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மற்றதைவிட விலைவிகிதம் குறைவாக கொடுத்துள்ள M/S- KB SYSTEM AND SERVICE,RAJAPALAYAM நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்

தீர்மானம் எண் 188 அனுமதிக்கப்பட்டது.

நகராட்சி பொறியாளர் மற்றும்
ஆணையாளர்(பொ) /தனி அலுவலர்
இராஜபாளையம் நகராட்சி